விலை: 50.00
website : www.valampurii.lk
viber : 076 636 3378
பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 100 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 15 புதன்கிழமை (29.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## நெடுங்கேணி ஆதிசிவனை புனர்நிர்மாணம் செய்ய அமைச்சரவை தீர்மானம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



(கிளிநொச்சி)

காடையர்களால் அடித்து நொருக்கப்பட்ட நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிசிவனை புனர்நிர்மாணம் செய்ய அமைச்சரவை முடிவு செய்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் இதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆதரவு இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி நகர பேருந்து நிலையத் திறப்பு விழாவில் உரையாற்றும்போதே குறித்த விடயத்தினை தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

துஷ்டர்களினால் சின்னா பின்னமாக்கப்பட்ட நெடுங் 11

## ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் உடைப்பு

### அறிக்கை சமர்ப்பித்து குற்றவாளிகளை கைது செய்யுமாறு நீதிமன்றம் பொலிசாருக்கு உத்தரவு

*(வவுனியா)*

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணை செய்து நாளை 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பொலிசாருக்கு வவுனியா நீதவான் நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளதோடு குற்றவாளிகளை கைது செய்யுமாறு உத்தரவிட்டுள்ளது. (11ஆம் பக்கம் பார்க்க)

## பளையில் விபத்து; குடும்பஸ்தர் பலி

(பளை)

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இந்திராபுரம் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

குறித்த விபத்து நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

பளை நோக்கி நடந்து சென்று கொண் 11

### புளியம்பொக்கணையில்

## கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை



11

### ‘சிவன் சொத்தை தீண்டினால் குலமே நாசமாகும்’

## நல்லூரில் கண்டனப் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டமைக்கு எதிராக சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூரில் நேற்று கண்டன போராட்டம் இடம்பெற்றது. 11

### இந்துபோட் அலுவலகத்தை தாக்கிய

## 12 மாணவர்கள் சீர்திருத்தப்பள்ளிக்கு

### யாழ்.சிறுவர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் அமைந்துள்ள சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் (இந்து போட்) தலைமை அலுவலகம் நேற்று முன்தினம் தாக்கப்பட்ட சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட 12 மாண 11

## தொல்லியலுக்கு எதிராக செயற்பட்டால் பிணை இல்லை

### சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு கூட பிணையுள்ளது. ஆனால் தொல்லியல் சார்ந்த சின்னங்களுக்கு எதிராக செயற்படுமிடத்து அதற்குப் பிணை இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தொல் பொருள் 11

## இளவாலையில் இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, கலைவாணி வீதி, வடலியடைப்பு பண்டத்தரிப்பு பகுதியில் 29 வயது இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவர் பாதுகாப்பு உத்தியோகத்த 11

## தேர்தல் ஆணைக்குழு ஏப்ரல் 4 மீண்டும் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

தேர்தல் ஆணைக்குழு கூட்டம் எதிர்வரும் 04ஆம் திகதி நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கடந்த வாரம் அரசியல் கட்சி செயலாளர்களுக்கும் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலுக்கான நிதி தொடர்பான கோரிக்கை நிதியமைச்சர் என்ற 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 19.08.1947 | 09.04.2022 |



அமரர்

## செல்லத்துரை இராசமணி

ஓராண்டு நகர்ந்தாலும்
ஒருநொடி கூட நம்பமுடியவில்லை
நேற்றுக் கண்ட உமை நினைத்து
நெஞ்சம் தடுமாறுகின்றதே!
கண்ணீர் மலர்தூவி அஞ்சலிக்கும் இந்நாளில்
இறையோடு கலந்த உம் ஆத்மா
சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம். (15070)

சூசையப்பர் கோவிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.


தகவல் : கணவன்
077 174 4320

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

## வேலுப்பிள்ளை செல்வரத்தினம் (இரத்தினம்)

(உப்பு வல்லை ஸ்ரீமங்கள விநாயகர் ஆலயம், சிறிதேவி இல்லம், சிறிதேவி பழக்கடை, சிறிதேவி சைவ உணவகம் ஆகியவற்றின் உரிமையாளர்)



| பிள்ளையாய் மடியில் | மங்கள விநாயகர் பாதத்தில் |
|---|---|
| 08.08.1942 | 28.02.2023 |

கடந்த 28.02.2023 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வேலுப்பிள்ளை செல்வரத்தினம் அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (30.03.2023) வியாழக்கிழமை அதிகாலை 4.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் தங்களை கலந்து கொள்ளுமாறும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு வருகை தருமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் எம்முடன் பல வழிகளிலும் துயர் பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்று வரை எமக்கு பல உதவிகளையும் செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வைத்தியசாலை வீதி,
மந்திகை, புலோலி.

(C-6250)

இங்ஙனம்:
குடும்பத்தினர்

# மணிவிழா வாழ்த்துக்கள்





29.03.2023 ஆம் ஆண்டு தனது 60ஆவது அகவை அன்று
மணிவிழாக் காணும் எமது நிறுவனங்களின் உரிமையாளரும்
தாயகம் அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகருமான

## கலாநிதி திரு. S.V.சிறிதரன்

அவர்களை பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ
எல்லாம் வல்ல இறைவனை மனமார
வேண்டுகின்றோம்.

இறைக்கும் கிணறே
சுரக்கும் என்பார்கள்
அவ்வழியில் ஏழைகளுக்கு
பல உதவிகளைச் செய்து
மனிதாபிமானம் மிக்க மனிதனாய்
உயர்ந்து நிற்கும் எங்கள்
கலாநிதி சிறிதரன் ஐயாவை
மணிவிழா நாளில் வாழ்த்துகின்றோம்.

பணியாளர்கள்
கொனிக்கா கலர் லாப் நிறுவனம்,
சிறிராம் ஜுவல்லர்ஸ் நிறுவனம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராடும் உரிமையை சீர்குலைத்த பல நாடுகளில் இலங்கையும் ஒன்று

## சர்வதேச மன்னிப்புச் சபை

**(கொழும்பு)**

**மக்களின் போராடும் உரிமையை சீர்குலைத்த பல நாடுகளில் இலங்கையும் ஒன்று என சர்வதேச மன்னிப்புச் சபையின் மனித உரிமைகள் தாக்கத்திற்கான சிரேஷ்ட பணிப்பாளர் டிப்ரஸ் முச்சென் தெரிவித்தார்.**

நேற்று கொழும்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் வருடாந்த அறிக்கையை வெளியிட்டு அங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பற்றிய விவாதத்தில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும்.



எந்த ஒரு உதவி பொறிமுறையும் மனித உரிமைகளைக் குறைக்கக் கூடாது என்பதால் சமூகப் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் மனித உரிமைகள் நிலைமையைக் கருத்தில் கொண்டு அவசரத் தேவையை முன்னிலைப்படுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என டிப்ரஸ் முச்சென் தெரிவித்தார். (நி)

# தேர்தலுக்கு தேவையான நிதி தொடர்பில் இதுவரை பதில் இல்லை

## தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தேவையான நிதியை விடுவிப்பது தொடர்பில் நிதி அமைச்சிடம் இருந்து இதுவரை எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

சாதகமான பதில் கிடைக்குமென தாம் எதிர்பார்ப்பதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனிடையே, இந்த வாரத்திற்குள் பிரதமருடனான கலந்துரையாடலுக்கு சந்தர்ப்பம் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், ஏப்ரல் 4 ஆம் திகதி ஆணைக்குழு கூடி தேர்தல் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த தீர்மானிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி)

# நெல் கொள்வனவிற்கு 20 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு



## மஹிந்த அமரவீர

(கொழும்பு)

பெரும்போகத்திற்கு தேவையான நெல்லை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் 20 பில்லியன் ரூபாவை செலவிடத் தயார் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு பெரும் போகத்திற்கு தேவையான நெல்லை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், குறைந்த வருமானம் பெறும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டு மாதங்களுக்கு 10 கிலோ அரிசியை வழங்க முடிவு செய்துள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்தை தொடர முடியாவிட்டால், இந்த குடும்பங்களுக்கு மானியமாக நிதியுதவி வழங்க அரசு தயாராக உள்ளது என்றும் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (நி)

# எரிபொருட்களின் விலைகளை 120 ரூபாய் வரை குறைக்கலாம்

(கொழும்பு)

நாட்டில் விற்பனை செய்யப்படும் அனைத்து வகையான எரிபொருள் வகைகளும் லீற்றர் ஒன்றுக்கு 120 ரூபாய் வரையில் குறைக்கப்பட முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொழிற்சங்கமான ஐக்கிய தொழிற்சங்க ஒன்றியத்தின் பேச்சாளர் ஆனந்த பாலித இந்த விடயத்தை சுட்டிக் காட்டியுள்ளார்.

95 ஒக்டேன் ரக பெற்றோல் ஒரு லீற்றரின் சில்லறை விலை குறைந்தபட்சம் 125 ரூபாவினாலும் மண்ணெண்ணெய் விலையை லீற்றர் ஒன்றுக்கு 110 ரூபாவினால் குறைக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி எரிபொருட்களின் விலைகள் குறிப்பிடத்தக்களவு குறைக்கப்படும் என முன்னதாக எரிசக்தி அமைச்சர் பாராளுமன்றில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த குறிப்பிடத்தக்களவு 100 ரூபாவிற்கு அதிகமாகும் என தெரிவித்துள்ளார்.

எரிபொருட்களின்விலையை குறைப்பதன் மூலம் மின்சாரக் கட்டணங்களையும் நியாயமான அளவில் குறைக்கப்பட முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை பெட்ரோலியக் கூட்டுத்தாபனம் கடந்த மாதம் 9 பில்லியன் ரூபாய் இலாப மீட்டியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உரிய நியமங்களை பின்பற்றி எரிபொருள் கொள்வனவு செய்யப்பட்டால் நாட்டு மக்களுக்கு மேலும் குறைந்த விலையில் எரிபொருள் வழங்க முடியும் என ஆனந்த பாலித தெரிவித்துள்ளார். (நி)

# சிறுவர்களிடையே பரவும் கண் தொடர்பான நோய்

## அவதானமாக இருக்க வேண்டுமென பெற்றோர்களிடம் கோரிக்கை

(கொழும்பு)

இன்ஃப்ளுவன்ஸா போன்ற வைரஸ் நோய்கள் இந்த நாட்களில் குழந்தைகளிடையே பரவுவதாக குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கண் சிவப்பாகுதல், கண்ணில் இருந்து நீர் வெளியேறுதல், கண் அரிப்பு மற்றும் இருமலுடன் தடிமன் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நோய் அறிகுறிகள் தென்படுமாயின் சிறுவர்களை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம் எனவும் அவ்வாறானவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறும் அவர் பெற்றோர்களிடம் கோரியுள்ளார்.

சிறுவர்களுக்கிடையே கண்சார்ந்த நோய் ஒன்று பரவிவருதாகவும் அது தொடர்பில் பெற்றோர் அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சுகாதார தரப்பினரும் அறிவுறுத்தியுள்ளனர். (நி)

# மேலும் 5 ஆயிரம் மாணவர்களுக்கு உயர்கல்வியை தொடர வட்டியில்லா கடன்

(கொழும்பு)

அரச சார்பற்ற பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்கைநெறிகளை மேற்கொள்வதற்காக மேலும் 5,000 மாணவர்களுக்கு வட்டியில்லா கடனுதவி வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (நி)


# பதவி வெற்றிடம்

- **தமிழ் ரைப்பிங்/ பக்க வடிவமைப்பாளர்**
  அனுபவமுள்ளவர்கள்/பயிலுநர்கள் (இருபாலாரும்)
- **அலுவலகச் செய்தியாளர்**
  (இருபாலாரும்)
- **இயந்திர இயக்குநர்/பயிலுநர்**
  (ஆண்கள்/ இரவுக் கடமை)

**யாழ்.நகருக்கு அண்மையில் இருப்பவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.**

**076 097 3121**


# கேக் கொள்வனவு செய்வதை தவிர்க்குமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டைகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் கேக்குகளை கொள்வனவு செய்ய வேண்டாம் என்று அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர்கள் சங்கம் மக்களிடம் அறிவுறுத்தியுள்ளது.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சங்கத்தின் தலைவர் அசேல சம்பத்,

கொழும்பு துறைமுகத்துக்கு வந்த திரவ முட்டைகள் சுமார் ஏழு நாட்களாக விடுவிக்கப்படாமல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இந்தநிலையில், அவை பழுதடைந்திருக்கலாம் என்ற அடிப்படையில், எதிர்வரும் புத்தாண்டுக்கு இந்த முட்டைகளைப் பயன்படுத்தி கேக் தயாரிக்க வேண்டாம் என்று வெதுப்பக உரிமையாளர்களிடம் அசேல சம்பத் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த இறக்குமதி மூலம் சுங்கம் ஏற்றுமதி - இறக்குமதி சட்டத்தை மீறியுள்ளது. எனவே பொது சுகாதார ஆய்வாளர்கள் துறைமுகத்திற்குச் சென்று முட்டைகளின் நிலையை பரீட்சிக்க வேண்டும் என்றும் அசேல சம்பத் கோரியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரை வென்றது ஆப்கானிஸ்தான் அணி

ஆப்கானிஸ்தான் அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான இருபது-20 போட்டியில், பாகிஸ்தான் அணி 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆனாலும் முதலிரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று ஆப்கானிஸ்தான் அணி, மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்த தொடரை வெற்றி கொண்டதன் மூலம் பாகிஸ்தான் அணிக்கெதிரான முதல் இருபது-20 தொடரை ஆப்கானிஸ்தான் அணி கைப்பற்றியது.

சார்ஜாவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி, களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 182 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து பதிலுக்கு களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணி, 18.4 ஓவர்கள் நிறைவில் 116 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், பாகிஸ்தான் அணி 66 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக, சதாப் கான் தெரிவு செய்யப்பட்டதோடு, தொடரின் நாயகனாக மொஹமட் நபி தெரிவு செய்யப்பட்டார். (4)

# உதைபந்தாட்ட போட்டி

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய கல்லூரிக்குமான உதைபந்தாட்ட போட்டி ஏப்ரல் 1 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக யா/ ஹாட்லி கல்லூரி அதிபர் த.கலைச்செல்வன் மற்றும் யா/ நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் ஜீ. கிருஷ்ணகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# இருபது- 20 தொடருக்கான நியூஸிலாந்து அணி அறிவிப்பு

இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபது- 20 தொடருக்கான நியூஸிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

2021 பங்களாதேஷ் அணிக்கு எதிரான இருபது- 20 தொடருக்கு பின்னர் நியூஸிலாந்து அணிக்கு டொம் லதம் தலைமை தாங்குகின்றார்.

இலங்கை மற்றும் நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான இருபது- 20 தொடர் அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஒக்லாந்தில் ஆரம்பமாகவுள்ளது.

இரு நாடுகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி நேற்று செவ்வாய்க்கிழமை கிறைஸ்ட்சர்ச்சில் நடைபெற இருந்த நிலையில் மழை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டது. (4)

# உலகக் கிண்ணத்துடன் மெஸ்ஸியின் உருவச் சிலை திறப்பு



பராகுவேயிலுள்ள CONMEBOL அருங்காட்சியகத்தில் டியாகோ மரடோனா, பீலே ஆகியோரின் சிலைக்கு அருகே லியோனல் மெஸ்ஸியின் சிலை திறக்கப்பட்டுள்ளது.

பராகுவேயின் லுக்கில் உள்ள CONMEBOL தலைமையகத்தில் நேற்று முன்தினம் திங்களன்று நடைபெற்ற திறப்பு விழாவில் உலகக்கிண்ணத்தின் பிரதியை வைத்திருக்கும் மெஸ்ஸியின் உருவ சிலை திறக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஆர்ஜென்டீனாவிற்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுத் தந்ததற்காக வரலாற்றில் இதனை பதிவு செய்யும் வகையில் இந்த உருவச்சிலை திறக்கப்பட்டுள்ளது.


கையில் உலகக்கிண்ணத்துடன் இவரது உருவச்சிலை ஆர்ஜென்டீனாவிற்கு உலகக் கிண்ணத்தை வாங்கி தந்த வீரர்களான பீலே மற்றும் டியாகோ மரடோனாவின் சிலைகளுக்கு அருகில் வைக்கப்பட்டுள்ளது. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2795

### தினோசா

டாக்டர் பஸ்ஸில் கொஞ்சதூரம்
போறப்பவே தூக்கம் வந்துடுது!
பஸ் பிரயாணத்திலே யாருக்குமே
கொஞ்சம் கண்ணயர்ந்து போறது சகஜம்.
அதோட இப்படி இடைக்கிடை கொஞ்சம்
தூங்கறது உடம்புக்கு நல்லது தானே! ஆமா
என்ன வேலை பார்க்கிறீங்க?
பஸ் டிரைவரா இருக்கேன் டாக்டர்!

### சுஜா




### ரமேஷ்

வாழ்க்கையில் திரும்பி பார்க்க
முடியாத வலின்னா அது...



கழுத்துவலி தான்...

### ஜஸ்விகா



நேர்த்தியும் நேசமும்
இன்னமும்
அழியாமல்
தான் இருக்கிறது,
அந்த அந்த
கிராமத்தின் மூத்த
முதுமைகளிடத்தில்...

### நித்தீஸ்



அப்பனே சூரிய பகவானே உன்னை நம்பி
சோப்பு போட்டு துணி துவைச்சு காய வைச்சிருக்கேன்
மழை வராம நீதான் பாத்துக்கனும்...

### சரவணன்

உங்கள் வாழ்க்கையில்
வருவதை எப்போதும்
சரி செய்ய முயற்சி
செய்யாதீர்கள்...
எது வந்தாலும் நீங்கள்
நன்றாகவே இருப்பீர்கள்
என்ற நம்பிக்கையுடன்
உங்களை நீங்களே சரி
செய்து கொள்ளுங்கள்....



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் கலாசார மண்டபம் தொடர்பான ஆளுநரின் தீர்மானத்தை எதிர்த்து மனு

(அராலி)

வடக்கு ஆளுநரின் தீர்மானத்தை நிறுத்துமாறு யாழ்.மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் 28 பேர் கையொப்பத்துடன் மனுவொன்றை ஒப்படைத்துள்ளோம். இதேவேளை யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் மணிவண்ணன். ஆளுநரின் தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தை நாடவுள்ளார் என யாழ். மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் வரதராஜா பார்த்தீபன் தெரிவித்தார்.

மேலும் ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் நேற்று நடைபெற்ற கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக் கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

கடந்த 19 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் நிறைவுக்கு வந்த நிலையிலே 23 ஆம் திகதி யாழ். மாநகர சபையை நாவலர் மண்டபத்திலிருந்து வெளியேறுமாறு ஆளுநரிடமிருந்து கடிதம் வந்ததாக அறிய முடிகின்றது. இவ்வளவு காலமும் மண்டபத்தை பராமரித்து வந்த மாநகர சபையை பதவிக்காலம் நிறைவுற்றவுடன் வெளியேற்றி மண்டபத்தை கைப்பற்ற முயற்சிப்பதற்கான திட்டமிடப்பட்ட நிகழ்ச்சியாகும். இதற்கு நாவலர் மண்டபத் திலிருந்த நாவலர் படத்துக்கு பதிலாக பதாகையை காட்சிப்படுத்தியமையாலேயே மாநகர சபையை வெளியேற்றியதாக காரணங்களைக் கூறிவருகின்றனர்.

குருந்தூர் மலை. வெடுக்குநாறி மலையில் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமைக்கு எதிராக ஆளுநர் எவ்விதமான நடவடிக்கைகளையோ கண்டனத்தையோ வெளியிடவில்லை. ஆனால் பௌத்தத்திற்கும் இந்து கலாசாரத்திற்கும் பங்கம் விளைவிக்கும் விதத்திலே இவரது செயற்பாடுகள் காணப்படுகின்றது.

இதேவேளை ஆளுநரின் தீர்மானத்தை நிறுத்துமாறு 28 மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களின் கையொப்பத்துடன் மனுவொன்றை ஒப்படைத்துள்ளோம். இதேவேளை யாழ். மாநகர சபை முன்னாள் மேயர் மணிவண்ணன் ஆளுநரின் தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் நாட்களில் நீதிமன்றத்தை நாடவுள்ளார்.

எனவே இத் தீர்மானத்தை நிறுத்துவதற்கு சட்ட ஏற்பாடு மற்றும் பல்வேறு வழிகளிலும் நாங்கள் தொடர்ந்தும் செயற்படுவோம். என தெரிவித்தார்.(4-6-33-104)


## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

உசன் காட்டுவளவுக் கந்தசாமி கோயிலுக்கு சொந்தமான ஆதனத்தை 30 வருடகால குத்தகை வழங்குவது தொடர்பான அறிவித்தல்

Trust ordinance இன் பிரிவு 38(1)
இன் கீழான விண்ணப்பம்
குகதாசன் விமலதாஸ் (முகாமையாளர் உசன் காட்டுவளவு, கந்தசாமி கோவில்)
உசன், மிருசுவில்.

-மனுதாரர்

வழ.இல: நாணாவிதம்/246/2023 எதிர்

1. குகதாசன் கமலதாசன்
2. விமலதாஸ் சிறிகணன்
3. விமலதாஸ் யதுகுலன்
4. சுவாமிநாதன் சற்குணநாதன்
உறுப்பினர்கள்
உசன் காட்டுவளவு கந்தசாமி
கோவில் நிர்வாக சபை

-எதிர்மனுதாரர்கள்

உசன் காட்டுவளவு கந்தசாமி கோவிலுக்கு சொந்தமானதும் விடத்தற்பளையில் அமைந்திருப்பதுமான "விக்றோறியா டிறமோர்" என்னும் ஏக்கர் 175 ரூட் 01 பேட்ஸ் 32 விஸ்தீரணம் கொண்ட காணியினை Rajeswary Agro & Diary (PVT) Ltd இற்கு வழங்குவதற்கு குறித்த கோவில் நிர்வாக சபை உறுப்பினர் அனைவரும் ஏகமனதாக முடிவு செய்து அதற்கு அனுமதி கோரி நாணாவிதம்/246/2023 என்ற வழக்கினை சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனராகையால் இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியோ அதற்கு முன்னரோ சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் தோன்றி மேற்குறித்த வழக்கில் அதனை தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகிறீர்கள்.

2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி.

மன்றின் கட்டளைப்படி

**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம்,**
**சாவகச்சேரி.**

(15072)


# சித்த மருத்துவ பிரிவுகளை பீடங்களாக தரமுயர்த்த அனுமதி

(கொழும்பு)

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகங்களின் திருகோணமலை வளாகத்தில் தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவ பிரிவுகளை தரமுயர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தில் தற்போது காணப்படுகின்ற சித்த மருத்துவ பிரிவுகளைப் பீடங்களாகத் தரமுயர்த்துதல் தொடர்பில் கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது. அதற்காக போதியளவு கல்வி மற்றும் ஊழியர்கள் வசதிகள் உள்ளனவா என்பதை ஆராய்ந்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, சித்த மருத்துவ பிரிவுகளைப் பீடங்களாக மாற்றம் செய்வதற்குப் போதுமானளவு மனிதவளம் மற்றும் பௌதீக வளங்கள் காணப்படுவதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

கல்வி அமைச்சர் சமர்ப்பித்த குறித்த விடயங்களைக் கருத்தில் கொண்டு குறித்த சித்த மருத்துவப் பிரிவுகளை. பீடங்களாகத் தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (நி)

# வாகன ரயர்களின் விலையில் மாற்றம்

(கொழும்பு)

டொலரின் பெறுமதியில் ஏற்பட்ட மாற்றத்தால் இறக்குமதி செய்யப்படும் ரயர்களின் விலைகள் குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இறக்குமதி செய்யப்படும் ரயர்களின் விலையை 5 வீதத்தினாலேயே குறைக்க முடியும் என ரயர் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே. கொள்வனவு செய்த ரயர்கள் சந்தையில் இருக்கின்றமையே இதற்கு காரணம் என அதன் தலைவர் சுனில் பொன்சேகா தெரிவித்தார். எவ்வாறாயினும். புதிய கையிருப்புக்களைப் பெற்ற பின்னர். அடுத்த மூன்று மாதங்களுக்குள் இறக்குமதி செய்யப்படும் ரயர்களின் விலை சுமார் 15 வீதத்தினால் குறைக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலரின் பெறுமதி நாளுக்கு நாள் குறைவடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

**29.03.2023**
**பங்குனி 15, புதன்கிழமை**
**அவிட்டம் முன்னிரவு 11.39 மணிவரை**

**திருவாதிரை முன்னிரவு 10.23 மணிவரை**
**சுபநேரம் 4.43-6.13 மணிவரை**
**இராகுகாலம் 12.13-1.43 மணிவரை**

**மஹாஷ்டமி**
**சந்திராஷ்டமம் -**
**அனுசம், கேட்டை**

**வளவன்**



முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், உறவினர்கள் உங்களின் நலனில் அக்கறை காட்டுவர்.



உடல் நலனில் கவனம் செலுத்த வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் பெற அதீத பிரயாசை காட்ட வேண்டிய நாள்.



தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, ரோக பயமுண்டு.



பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, தேக நலனில் உற்சாகமான நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



வார்த்தைகளில் நிதானம் தேவை, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.



குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.



மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ரோக பயமுண்டு.



பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், செய்தொழிலில் முன்னேற்றம் பெற பாடுபடுவீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.



பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறும் வாய்ப்புண்டு, மனதில் இனம்புரியாத கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், செய்தொழில் முன்னேற்றம் பெற பாடுபடுவீர்கள்.



தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உற்சாகமான நாள், போசன சுகமுண்டு.



நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், நண்பர்களின் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இயற்கையின் நடையைப் பின்பற்று அதன் இரகசியம் பொறுமை.**

# ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் உட்பட 9 பேர் கைது



(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் ஹெரோயின் போதைப்பொருளுடன் பெண் ஒருவர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சுற்றிவளைப்பில் இருவரும் நேற்று காலை இடம்பெற்ற சுற்றிவளைப்பில் 7 பேரும் மானிப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுதுமலை பகுதியை சேர்ந்த 37 வயதான பெண் ஒருவர் 5 கிராம் 800 மில்லிகிராம் ஹெரோயினுடனும் ஏனையோர் 2 கிராம் 950 மில்லிகிராம் ஹெரோயினுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர். மொத்தமாக 8 கிராம் 750 மில்லிகிராம் கைப்பற்றப்பட்டுள்ளது. இவர்கள் சுதுமலை, சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பகுதியினை சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (4-6-104)

# கோட்டாவைப் போல ஜனாதிபதி ரணிலும் கருமவினைகளை சந்திக்கப் போகிறார்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்



(கிளிநொச்சி)

அரசாங்கம் கச்சதீவு உள்ளிட்ட இடங்களில் புத்தரைக் குடியேற்றி இடம்பிடிக்கின்ற செயற்பாட்டில் ஈடுபடும் நிலையில், கோட்டாபயவின் காலத்து கரும வினைகள் வெளிப்பட்டது போன்று ரணில் காலத்திலும் வெளிப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வெடுக்குநாறி மலை விவகாரம் தொடர்பில் அவர் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

தமிழ் மக்களுடைய வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மிக முக்கியமான வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வெடுக்குநாறி எனும் பகுதியிலே நீண்ட நெடுங்காலமாக வரலாற்று ரீதியிலே சைவத் தமிழ் பாரம்பரியத்தோடு ஆதி சிவனை வழிபட்டு வந்த மூதாதையரும் அந்த பரம்பரையும் அந்த மண்ணில் இருக்கின்றார்கள்.

அவ்வாறான வெடுக்குநாறி சிவனாலயமும் அந்த சிவனாலயத்தின் பரிபால தெய்வங்களான அம்மன், பிள்ளையார், வைரவர் போன்ற கடவுள்களுடைய சிலைகளும் அடித்து உடைத்து சிதைக்கப்பட்டுள்ளன.

இது இந்த நாட்டில் மிகவும் கேவலமான செயல். தாங்கள் செய்த கர்மம் என்பது கோட்டாபயவின் காலத்தில் அவருக்கு வெளிப்பட்டிருந்தது. அதனைத் தாண்டி மீண்டும் ரணில் விக்கிரமசிங்கவின் காலத்திலும் கரும வினைகளை அவர்கள் சந்திக்கப் போகின்றார்கள்.

ஆட்சியாளர்கள் எங்கெங்கு பௌத்தங்களை வைக்க முடியுமோ வைத்து, அந்த இடங்களை ஆக்கிரமிக்க மிகக் கடுமையாக ஈடுபடுகின்றார்கள்.

இது இந்த நாட்டின் ஜனாதிபதி, அதற்குப் பொறுப்பாக இருக்கின்ற அமைச்சர்கள் இனவாதத்தின் உச்சத்தில் இருக்கிறார்கள் என்பதைத் தான் இந்தச் செயற்பாடுகள் வெளிக்காட்டுகின்றன.

ஆகவே நாங்கள் தொடர்ந்தும் இந்த விடயத்திற்காக குரல் கொடுப்போம். தொடர்ந்தும் ஆதிசிவன் ஆலயம் வெடுக்குநாறி மலையில் இருப்பதற்கான முழுவகையான முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கின்றோம். இவ்விடயம் தொடர்பில், வரும் வியாழனன்று மிகப்பெரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படும்.

உருவச்சிலைகளை இருந்த இடங்களில் மீள வைக்கும் வரை தமிழர்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு ஒற்றுமையாக இந்த பணியை செய்ய வேண்டும்.

இதிலே, அரசியல், கருத்து வேறுபாடுகளை ஒரு புறம் வைத்துவிட்டு நாங்கள் சைவத் தமிழர்கள், இந்துத் தமிழர்கள் எல்லோரும் இணைந்து பிடுங்கப்பட்ட சிலைகளை அங்கு கொண்டு சென்று அதனை பிரதிஷ்டை செய்து தொடர்ந்தும் அந்த இடத்தில் வழிபாடுகள் இடம்பெறும் வகையில் எங்களுடைய செயற்பாடுகள் அமைய வேண்டும் என நான் வேண்டி நிற்கின்றேன் எனத் தெரிவித்தார். (4-6-316)

# டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்வு 2023 ஏப்ரல் மாதம் 1 ஆம் மற்றும் 3,4 ஆம் திகதிகளில் யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புகள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச தனியார் நிறுவனங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் மயானங்களின் சுற்றுச்சூழல் துபபுரவாக பேணுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், மற்றும் ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (4)

# கிளிநொச்சியை சேர்ந்த 8 பேர் தமிழகத்தில் தஞ்சம்

(முறிகண்டி)

கிளிநொச்சி பகுதியிலிருந்து இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த ஒரு ஆண், ஐந்து பெண்கள், ஒரு ஆண் குழந்தை, ஒரு பெண் குழந்தை உட்பட எட்டு பேர் நேற்று முன்தினம் அகதிகளாக இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

கிளிநொச்சி தருமபுரம் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பங்களே இவ்வாறு தமிழகத்தைச் சென்றடைந்துள்ளனர். நேற்றுக் காலை இந்தியக் கடலோர காவல் படையினர் ஹோவர் கிராப்ட் கப்பலில் சென்று மீட்டு தனுஷ்கோடியை அடுத்த அரிச்சல்முனை கடற்கரையில் இராமேஸ்வரம் கடலோரப் பாதுகாப்பு குழும பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவர்களை மண்டபம் கடலோர பாதுகாப்பு குழும காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு அழைத்து சென்று விசாரணைக்குப் பின் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன. (4-6-100)

# தந்தை செல்வாவின் ஜெயந்தி தினம்

(யாழ்ப்பாணம்)

செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையினால் தந்தை செல்வாவின் 125 ஆவது ஜெயந்தி தினமும் நூல் வெளியீடும் நாளை மறுதினம் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தந்தை செல்வா கலையரங்கில் யாழ். பல்கலை வேந்தர் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4)

# முப்பெருங்கூடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் வடக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இணைந்து நடத்தும் புத்தகக் கண்காட்சி விற்பனை, நாவலர் வரலாற்று சித்திரக் காட்சி, விழிப்புணர்வு நாடக ஆற்றுகை என்பவற்றைக் கொண்ட முப்பெரும் கூடல் நிகழ்வு யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் நேற்று ஆரம்பமாகியதுடன் இன்று காலை 4 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (4)

# இசை விழாவும் தங்கப்பரிசு கலைப் போட்டிகளும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மன்றத்தினால் 53 ஆவது ஆண்டு இசைவிழாவும் தங்கப் பரிசு கலைப் போட்டிகளும் நாளை மறுதினம் 31 ஆம் திகதி முதல் 2 ஆம் திகதி வரை மாலை 4.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற ம்ண்டபத்தில் நடைபெறவுள்ளது. (4)

# நாவலர் கலாசார மண்டப விவகாரம் ஆளுநர் செயலகத்திற்கு முன் முன்னணி நேற்று போராட்டம்



(கொழும்பு)

தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திற்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநரால் நாவலர் கலாசார மண்டபம் மத்திய அரசாங்கத்திற்கு தாரைவாக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (4-6-33-104)

# யாழ்.மாவட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வாராந்த சந்தை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருட்களுக்கான சந்தை வாய்ப்பை பெற்றுக் கொள்ளும் முகமாக மாவட்ட செயலகத்தினால் எதிர் வரும் 2 ஆம் திகதியிலிருந்து ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும் சங்கிலியன் பூங்கா வளாகத்தில் வாராந்த சந்தை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணம் மாவட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வாராந்த சந்தை" என்ற கருப்பொருளில் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டத்தின் கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட விவசாயத்துறை, கைத்தொழில் துறை சார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யமுடியும் என்று மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

இதனூடாக உற்பத்தியாளர்களின் இடைத்தரகர்களுக்கான செலவினம் குறைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நுகர்வோர்களின் தேவைக்கேற்றவாறு உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு அவர்கள் தமது பொருளாதாரத்தில் முன்னேற்றமடைவதுடன் ஏனையவர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை பின்பற்றி பயன் பெற விரும்பும் முயற்சியாளர்கள் தமது பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும்.

அத்துடன் அலுவலக நேரத்தில் 021 221 3861, 077 884 2577 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளவும் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார். (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பூரில் சூரிய மின் உற்பத்தி

## அமைச்சரவை அனுமதி

(கொழும்பு)

இலங்கை மின்சார சபை மற்றும் இந்திய தேசிய அனல் மின் கூட்டுத்தாபனத்தின் கூட்டு வர்த்தக நிறுவனமொன்றுக்கு திருகோணமலை - சம்பூரில் சூரிய மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது.

சம்பூர் நிலக்கரி அனல் மின் உற்பத்தி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்ட இடத்திலேயே, 135 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


முதற்கட்டமாக 42.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 50 மெகா வாட் சூரிய மின் உற்பத்தி திட்டம் நடைமுறைப்படுத் தப்படவுள்ளது.

இதனைத் தவிர 23.6 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் சம்பூரில் இருந்து கப்பல்துறை வரையிலான 40 கிலோமீற்றர் தூரம் கொண்ட 220 கிலோ வாட் மின்மாற்றுவழியை நிர்மாணிப்பதற்கும் எதிர் பார்க்கப்பட்டுள்ளது.

. இரண்டாம் கட்டத்தின் கீழ், 85 மெகாவாட்டுடன் கூடிய சூரிய மின்னுற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)

# பசுமை பொருளாதார வலயத்திற்குள் முதலாவது நாடாக இலங்கை நுழையும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பசுமை பொருளாதாரத்திற்குள் நுழையும் வலயத்தின் முதலாவது நாடாக இலங்கை விளங்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பசுமைப் பொருளாதாரக் கொள்கை எதிர்வரும் இரு மாதங்களில் அறிமுகப்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் இயற்கை சக்தி மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கைக்கு வருகை தந்த முதலீட்டாளர்களுடன் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார். (நி)

# இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலரை கடனாக கோரவுள்ள இலங்கை

(கொழும்பு)

உணவு மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிடம் இருந்து மேலும் 1 பில்லியன் டொலருக்கான தற்காலிக கடன் வசதியை இலங்கை கோரவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை தமது பொருளாதார நெருக்கடியைச் சமாளிப்பதற்கும் ஏனைய அபிவிருத்தி பங்காளிகளிடமிருந்து நிதியுதவியை ஊக்குவிப்பதற்கும் கடந்த வாரம் 3 பில்லியன் டொலர் நீட்டிக்கப்பட்ட கடன் வசதிக்கு சர்வதேச நாணய நிதியம் அனுமதியளித்தது.

இதன் முதல் தவணையாக 330 மில்லியன் டொலர்களை இலங்கை பெற்றது.

இந்நிலையில் புதிய கடன் வசதி குறித்து இலங்கை கலந்துரையாடவுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)

# எரிசக்திதுறை ஒத்துழைப்பு தொடர்பாக இலங்கை-இந்தியா புரிந்துணர்வு ஒப்பந்தம்

(கொழும்பு)

இரு நாடுகளுக்கும் இடையே புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்தவும் இந்திய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது.

இதன்படி, எரிசக்தி துறை ஒத்துழைப்பு தொடர்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது.

அதன்படி இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளிலும் உள்ள பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்தத் திட்டத்தில் இணைந்து பணியாற்றவுள்ளன.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் செயற்படுத்தப்படும் சூரிய சக்தி, காற்றாலைத் திட்டங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. (நி)


## கனடா நாட்டில் குடியேறுவது உங்கள் கனவா?

இலங்கையின் பிரசித்தி பெற்ற கனடா விசா ஆலோசகர்களும், நம்பகரமான முகாமையாளர்களும் சிறப்பாக பங்குபெறும் யாழ். கல்வி கண்காட்சிக்கு வருகை தந்து உங்கள் கனடா கனவை இலகுவாக, விரைவாக, சட்ட ரீதியாக நனவாக்கிடுங்கள்.

உங்களுக்கு இலவசமான தனிப்பட்ட ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் முற்றிலும் இலவசமாய் வழங்கப்படும்.

√ *Student visa*
√ *Work visa*
√ *Skilled migration visa*

*Jaffna Education Fair 2023*

ஏப்ரல் 1 ம் 2ம் திகதிகளில்
யாழ்ப்பாணம், வலம்புரி ஹோட்டலில்! 9.00am To 6.00pm

Platinum Sponsor · Gold Sponsors · Silver Sponsors
Print Media Partner · Official Radio Partner · Supported by · Organized by

மேலதிக விபரங்களுக்கு:
077 886 6832, 077 343 6927



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**பேராசிரியர்.செ.சிவஞானசுந்தரம் நினைவுப்பேருரை - 2023**

பேருரைத் தலைப்பு :
"Tat Tvam Asi und Dasein"
Eastern Concept of Self in Western Practice of Psychotherapy-A Historical Sketch

பேருரை வழங்குநர்:
Professor. Gamini Hapuarachchi
Professor of Philosophy,
Department of Philosophy,
Faculty of Social Sciences,
University of Kelaniya.

திகதி : 30.03.2023 (வியாழக்கிழமை)
பி.ப 3.00 மணி

நிகழ்விடம் : ஹூவர் கேட்போர் கூடம்,
மருத்துவ பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (சி-6247)


# மீண்டும் வீழ்ச்சியை சந்தித்த இலங்கை ரூபா

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்பில் மத்திய வங்கி தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி சற்று அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினத்துடன் ஒப்பிடும் போது நேற்று ரூபாவின் பெறுமதி சற்று வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி வெளியிட்டுள்ள தரவுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரின் விற்பனை விலை 332.87 ரூபாவாகவும் கொள்வனவு விலை 315.84 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 240 | 150 | 200 |
| உருளைக்கிழங்கு | 150 | 160 | 140 | 180 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 250 | 250 |
| தக்காளி | 160 | 130 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 160 | 200 |
| கோவா | 80 | 100 | 100 | 150 |
| கரட் | 100 | 180 | 140 | 250 |
| பூசணி | 60 | 80 | 60 | 60 |
| புடோல் | 150 | 160 | 160 | 160 |
| வாழைக்காய் | 160 | 140 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 350 |
| பெரிய வெங்காயம் | 120 | 150 | 120 | 120 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 240 | 250 | 200 | 320 |
| கருணைக் கிழங்கு | 100 | 110 | 90 | 160 |
| பயற்றங்காய் | 150 | 160 | 130 | 150 |
| லீக்ஸ் | 260 | 220 | 280 | 350 |
| பீற்றூட் | 130 | 120 | 160 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 1200 | 1200 | 1200 |
| போஞ்சி | 200 | 200 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | 160 | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 50 | 80 |
| தேசிக்காய் | 350 | 250 | 240 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 300 | 300 | 280 | 350 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 120 | 300 |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 140 | — | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 139



சற்று நேரத்துக்கெல்லாம் சின்னப் பழுவேட்டரையர் திரும்பி வந்தார். அவருக்குப் பின்னால் ஒருவன் ஒரு தட்டில் சீர்வரிசை ஏந்திக் கொண்டு வருவது போல் வந்தியத்தேவனுடைய பழைய ஆடைகளை எடுத்து வந்தான்.

"தம்பி! இதோ உன் ஆடைகள் பத்திரமாயிருக்கின்றன. நன்றாக சோதனை செய்து பார்த்துக் கொள்!" என்றார் கோட்டைத் தளபதி.

அவ்விதமே வந்தியத்தேவன் சோதனை செய்து பார்த்தான். அரைச்சுற்றுச் சுருளில் அவன் வைத்திருந்ததைக் காட்டிலும் அதிகமாகப் பொற்காசுகள் இருந்தன. குந்தவை தேவியிடம் சேர்ப்பிக்க வேண்டிய ஓலையும் இருந்தது.

அதிக பொற்காசுகள் எப்படி வந் தன? முதலில் அவன் தேடிப் பார்த்த போது இல்லாத ஓலை இப்போது எப்படி வந்தது? சின்னப் பழுவேட்டரையரிடம் அது அகப்பட்டிருக்க வேண்டும்.

அதைப் பார்த்துவிட்டு இப்போது திரும்பி வந்த பிறகு அவர் அந்த ஓலையைத் திரும்பச் செருகியிருக்க வேண்டும். எதற்காக இப்படிச் செய்திருக்கிறார்? பொற் காசுகள் எதற்காக அதிகம் வைத்திருக்கிறார்? பொல்லாத மனிதர் இவர். இன்னும் எப்படியெல்லாம் தன்னைச் சோதிக்கப் போகிறாரோ, தெரியாது. இவரிடம் சர்வ ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். ஏமாந்து போகக் கூடாது!

"எல்லாம் சரியாயிருக்கிறதா, தம்பி! நீ கொண்டு வந்த பொன், பொருள் எல்லாம்?" என்று சின்னப் பழுவேட்டரையர் கேட்டார்.

"இதோ பார்த்துச் சொல்கிறேன்." என்று கூறி வந்தியத்தேவன் பொற்காசுகளை எண்ணினான். அதிகப்படி காசுகளை எடுத்துத் தனியாக பழுவேட்டரையர் முன்பு வைத்துவிட்டு, "தளபதி! வாணர் குலத்தில் பிறந்தவன் நான். ஆதித்த கரிகாலரின் தூதன் பிறர் பொருளுக்கு ஆசைப்படுவதில்லை!" என்றான்.

"உன்னுடைய நேர்மையை மிக மெச்சுகிறேன். ஆயினும் உன்னுடைய வழிச் செலவுக்கு இதை நீ வைத்துக் கொள்ளலாம். எப்போது புறப்பட விரும்புகிறாய்? இன்றைக்கே புறப்படுகிறாயா? அல்லது இன்றிரவு தங்கி இளைப்பாறிவிட்டு, பெரியவரையும் பார்த்து விட்டுப் போகிறாயா?" என்று கேட்டார் தளபதி.

"அவசியம் இன்றிரவு இங்கே தங்கிப் பெரிய பழுவேட்டரையரையும் தரிசித்து விட்டுத்தான் போக எண்ணியிருக்கிறேன். ஆனால் உங்கள் ஆட்களிடம் மட்டும் கொஞ்சம் சொல்லி வையுங்கள் என் பொருட்களில் கை வைக்க வேண்டாம் என்று!" இவ்விதம் சொல்லிக் கொண்டே அதிகப்படியாயிருந்த பொற்காசுகளையும் வந்தியத்தேவன் எடுத்துத் துணிச்சுருளில் பத்திரப்படுத்திக் கொண்டான்.

"மிக்க சந்தோஷம். உனக்கு இங்கே எந்தவிதமான இடைஞ்சல்களும் இனிமேல் இராது. உனக்கு என்ன வேண்டுமோ, தாராளமாய்க் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்."

"தளபதி! இந்தத் தஞ்சை நகரைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசையாயிருக்கிறது. பார்க்கலாம் அல்லவா?"

"தாராளமாகப் பார்க்கலாம். இதோ இவர்கள் இருவரும் உன்னோடு வந்து கோட்டைக்குள் எல்லா இடங்களையும் காட்டுவார்கள்.

கோட்டைக்கு வெளியில் மட்டும் போக வேண்டாம். சாயங் காலம் கோட்டைக் கதவுகளைச் சாத்தி விடுவார்கள். வெளியில் போய் விட்டால் திரும்பி இரவு வரமுடியாது.

(தொடரும்...)





# சிறுவர் அரங்கம்

## கருத்துடன் செயற்படு



ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பறணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கி விடும்.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பந்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பந்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம். அந்தக் கல்லை எப்படி கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான். அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங் கற்கள் கிடந்தன.

அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை. அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு அனிச்சைச் செயல் போல் ஆகி விட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங் கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெது வெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்கும் முன் கடலில் தூர எறிந்து விட்டான்.

**செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை.**

**பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தவிர்க்க வேண்டும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதமான விஷயங்களை உணர்ச்சியின்றிக் கையாளும் வேஷதாரிகளே பெரிய நாத்திகர்கள். அவர்களுக்கு இறுதியில் சூடு போடுதல் அவசியம்.
– பேக்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆதிலிங்கம் உடைக்கப்பட்டதை பிரதமர் மோடியிடம் முறையிடாதது ஏன்?

வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கத்தை அடித்து உடைத்த மாபாவம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் நடந்தாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் ஒரு சில கண்டனங்களோடு ஆதிலிங்க உடைப்பு அமர்ந்து போகும்.

தவிர, அரசியல்வாதிகளும் தத்தம் கடமைக்கு உடைத்த லிங்கத்தை மீளவும் அதே இடத்தில் நிர்மாணிக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் கோரினோம்.

அதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்பட்டுள்ளார் என்ற அறிக்கையோடு அவர்களின் பிராயச்சித்தப்பூசை முற்றுப் பெறும்.

எனினும் மீளவும் அதேயிடத்தில் லிங்கத்தை அமைக்க ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்தாலும் அது நடந்தாகுவதில் இழுத்தடிப்புகள் நிச்சயம் இருக்கும் என்பதுதான் உண்மை.

இங்குதான் நம் தமிழ் அரசியல்வாதிகள் கண்ணிருந்தும் பார்வையற்றவர்களாக இருக்கின்றனர்.

ஆம், வெடுக்குநாறிமலையில் உள்ள ஆதிலிங்கம் என்பது மிகத் தொன்மைவாய்ந்த சிவலிங்கம்.

சைவ சமயத்தை பொறுத்தவரை ஆகம விதிப் பிரகாரம் தேர்ந்தெடுக்கப்பட்ட கருங்கல்லினால் விக்கிரகம் அமைக்கப்படும்.

அவ்வாறு பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்கிரகம் யாக ஹோமங்கள் செய்யப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டு தெய்வீகப்படுத்தப்படும்.

இத்தெய்வீக சக்தி என்பது காலத்தின் அளவிலும் அங்கு செய்யப்பட்ட அபிசேகங்களாலும் வழிபட்ட பக்தர்களின் எண்ணிக்கையாலும் மக்கள் வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையாலும் வலுப்பெறும்.

ஆக, வெடுக்குநாறிமலையில் வீற்றிருந்த ஆதிலிங்கம் தெய்வீக சக்தியால் முற்றிக் கனிந்திருந்த சிவலிங்கம்.

கிடைத்தற்கரிய அந்த லிங்கத்தை உடைத்தெறிவதென்பது எப்பிறவியிலும் கழுவாய் தேடமுடியாத சிவப்பழியாகும்.

இந்த உண்மையை உணராதவர்கள் ஜனாதிபதியிடம் கேட்கிறார்கள் அந்த இடத்தில் மீளவும் லிங்கத்தை பிரதிஷ்டை செய்ய வேண்டுமென்று.

உண்மையில் நம் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களின் மீது பற்றுக்கொண்டவர்களாயின், ஆதிலிங்கம் அடித்து உடைக்கப்பட்ட சம்பவத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் கவனத்துக்கே அவர்கள் கொண்டு வந்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து ஜனாதிபதி ரணிலிடம் முறையிடுகின்றனராயின், அவர்களின் உள்நோக்கம் என்ன என்பதும் அவர்களுக்கும் அரசாங்கத்துக்குமான நெருக்கம் எவ்வாறாக உள்ளதென்பதும் புரிதற்குரியது.

## தமிழரசுக் கட்சியின் தலைமை தொடர்பில் மாநாட்டிற்கு பின்பே தெரியவரும் - மாவை

(யாழ்ப்பாணம்)

இலங்கை தமிழரசு கட்சியின் மாநாட்டிற்கு பின்னர்தான் யார் யார் எந்தெந்த பதவிகளில் வருவார்கள் என தெரியவரும் என இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் பதவியை பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் அவர்கள் பொறுப்பேற்கத் தயார் எனக் கூறியமை தொடர்பாக ஊடகவியளார் எழுப்பிய கேள்விக்கு அவர் இவ்வாறு பதில் அளித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

அந்தப் பிரச்சினை எல்லோரிடத்திலும் எழுந்திருக்கவில்லை. தமிழரசு கட்சியின் மாநாடு அதையொட்டி அந்த கிளைகள் அமைக்கும் வேலைத் திட்டம் நடைபெறவுள்ளது.

அந்த மாநாட்டில் தான் யார் பொறுப்புக்கு வர வேண்டும், யார் வருவார்கள் என்பதனை நாங்கள் தீர்மானிப்போம் என்றார். (ம-7,9,33,104)

## தொழிற்கற்கை நெறி விழிப்புணர்வுக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி இளைஞர் யுவதிகளின் தொழில் முயற்சிக்கு வலுச்சேர்க்கும் விதமாக NAITA நிறுவனத்தால் நடாத்தப்படும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதிகளவான வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய "பராமரிப்பு சேவையாளர்" "Care Givers"-(NVQ Level-3) தொழிற் கற்கைநெறி தொடர்பான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் இன்று புதன்கிழமை மு.ப 10.30 மணியளவில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் இடம்பெறவுள்ளது. இப் பயிற்சி நெறிக்கு 16-35 வயதுக்கு உட்பட்டோரும் 36-40 (நிபந்தனைக்குட்பட்டது) வயதுக்குட்பட்டோரும் விண்ணப்பிக்க முடியும். (ம-7,9)

## மனைவியை புகைப்படம் எடுத்தவர்களை தட்டிக் கேட்கச் சென்ற கணவன் மீது தாக்குதல்

யாழில் கச்சான் வாங்க வந்த பெண் ஒருவரை அங்கு நின்றவர்கள் புகைப்படம் எடுத்த நிலையில் அதனை தட்டிக்கேட்கச் சென்ற கணவன் மீது கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த சம்பவம் யாழ்ப்பாணம்- சுன்னாகத்தில் இடம்பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

யாழ் சுன்னாகம் பகுதிக்கு பெண்ணொருவர் தனது கணவருடன் பொருட்கள் வாங்க சென்றுள்ளார். இதன்போது பெண் கச்சான் வாங்க சென்ற போது சிலர் பெண்ணை அநாகரீகமாக புகைப்படம் எடுத்துள்ளனர்.

இந்நிலையில் அதனை அவதானித்த கணவர் அவர்களுடன் முரண்பட்ட போது கணவர் மீது அவர்கள் கண்மூடித்தனமான தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,9)

## குருதி கழுவிய குவலயம் நாடகம் நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றத்தால் அரை நூற்றாண்டைக் கடந்து வரலாற்றுப் பாரம்பரியத்துடன் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்பட்டு வருகின்ற திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு "குருதி கழுவிய குவலயம்" என்னும் பெயரில் நாளை 30 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஏப்ரல் மாதம் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நான்கு நாட்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல. 238, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடை யேற்றப்படவுள்ளது.

திருமறைக் கலாமன்றம் தனது அனைத்து வ்ளங்களையும் ஒருங்கிணைத்து பிரமாண்டமான படைப்பாக தயாரித்தளிக்கும் திருப்பாடுகளின் நாடகத்தை ஆண்டுதோறும் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டு வருகின்றார்கள்.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்திற்கேற்ற அரங்க நுட்பங்களை, சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது. இம்முறை மேடையேற்றப்படும் "குருதி கழுவிய குவலயம்" முதன் முதலாக 1999 ஆம் ஆண்டிலும், அதன் பின்னர் 2005 ஆம் ஆண்டிலும் மேடையேற்றப்பட்டது. தற்போது 18 ஆண்டுகள் கடந்து மீண்டும் மேடையேற்றப்படுகின்றது.(ம-7,9)

## பளையில் கஞ்சாவுடன் கைதான இரு பொலிஸாரின் பிணை விண்ணப்பம் நிராகரிப்பு

கிளிநொச்சி பளைப் பகுதியில் மதுவரித் திணைக்களத்தின் விசேட நடவடிக்கை பிரிவினரால் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இரு பொலிஸாரினதும் பிணை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி பளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் குறித்த பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட இருவரும் கஞ்சா கடத்த முற்பட்டமை தொடர்பில் கொழும்பிலிருந்து வருகை தந்த மதுவரித் திணைக்களத்தின் விசேட நடவடிக்கை பிரிவினரால் கடந்த 22 ஆம் திகதி இரவு 8 மணியளவில் கைது செய்யப்பட்டு பொருளுடன் நேரடியாக கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதுடன் கடுவல நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு 28 ஆம் திகதி நேற்றுவரை விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இருவரையும் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன் போது சந்தேக நபர்கள் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சந்தேகநபர்கள் சார்பில் பிணை கோரிய விண்ணப்பத்தை முன்வைத்த போது இதனை அவதானித்த மன்று பிணை விண்ணப்பத்தை நிராகரித்ததுடன் இருவரையும் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு கட்டளையிட்டுள்ளது.(ம-7,9,315)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **மன்னார் பிரதேசத்தில்** பள்ளிவாசல்பிட்டியிலும் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00. மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** வல்லான், ஆலடி சந்தி, இறுப்பிட்டி, கேரைதீவு, தரிகட்டுவான், முடத்துவெளி, நடுவக்குறிச்சி, புங்குடுதீவு, புங்குடுதீவு அரசடி சந்தி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும்.

## நவக்கிரக ஹோமம்

(இருபாலை)

இருபாலை திருவருள் மிகு கற்பகப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் நவக்கிரக ஹோமம் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு விசேட சனீஸ்வர ஹோமம், நவ நாயர்களுக்கும் விசேட திரவிய அபிஷேகமும் இடம்பெற்று நண்பகல் 12.15 மணிக்கு கும்ப அபிஷேகமும் சனி மாற்றத்தை ஒட்டி இடம்பெறவுள்ளது.

சனீஸ்வர தேஷமுடைய அடியவர்கள் ஹோமத்தில் கலந்து கொண்டு நவக்கிரக தேவர்களின் அருளை பெற்றுக்கொள்ளுமாறு தேவஸ்தான பிரதம குருமார்கள் அறிவித்துள்ளனர். (4-6-136)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிங்களவர்களே பூர்வீகக் குடிகள் என மாற்ற முற்படுகிறது அரசாங்கம்

## விக்னேஸ்வரன் எம்.பி சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

தொல்பொருள் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமீபத்திய நடவடிக்கையானது வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பகுதிகளை பௌத்த வழிபாட்டுத் தலங்களாக இனங்கண்டு மற்ற மதங்களின் வழிபாட்டு கட்டடங்களை அழித்து அங்கு பௌத்த வழிபாட்டுத் தலங்களை நிர்மாணிப்பதாகும் என பாராளுமன்ற உறுப்பின் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வெடுக்குநாறிமலை சிவன் ஆலயம் அழிக்கப்பட்டமை தொடர்பில் அவர் வெளியிட்ட கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வவுனியா வடக்கில் நெடுங்கேணியில் உள்ள வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அழிக்கப்பட்டு இந்து ஆலயம் இருந்த இடத்தில் வட்டமான பர்வத விகாரை நிறுவப்பட்டுள்ளது. விகாரையின் பெயர் கூகுளில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டு, பழைமையான பௌத்த கோயிலாகக் காட்டப்படுகிறது.

தொல்லியல் துறையின் கோமாளித்தனத்தின் ஒரு சுவாரசியமான அம்சம் வெளிவர வேண்டும்.

சுற்றுப்புறத்தில் ஒரு புத்த கோவில் இருந்ததற்கான சாத்தியக்கூறுகள் சரியாக இருக்கலாம். ஆனால் கி.பி 6 மற்றும் 7 ஆம் நூற்றாண்டுகளில் சிங்கள மொழி பிறப்பதற்கு முன்பே அத்தகைய புத்த கோவில் இருந்திருக்க வேண்டும்.

சிங்கள மொழி பிறப்பதற்கு முன் இந்த பூமியில் சிங்களவர்கள் இருந்திருக்க முடியாது. பழைய தமிழ் பௌத்த வழிபாட்டுத் தலங்களை இன்றைய சிங்கள பௌத்த வழிபாட்டுத் தலங்களாக மாற்றுவதற்கு திணைக்களம் முயற்சித்து வருகின்றது.

பழங்காலத்தில் அந்தப் பகுதிகளை சிங்களவர்கள் ஆக்கிரமித்திருந்தார்கள் என்பதைக் காட்டி, சிங்களவர்களின் காலத்தை கி.பி 6, 7 ஆம் நூற்றாண்டுகளுக்கு அப்பால் நீட்டிக்க வேண்டும் என்பதே இதன் கருத்து. மதவாதம்.

சிங்களவர்களுக்கு அவர்களின் கடந்த காலத்தைப் பற்றி அவர்களின் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் மற்றும் பிறரால் தவறாக ஆலோசனை வழங்கப்பட்டது. இந்தத் தீவின் பூர்வீகக் குடிகள் தமிழர்கள்.

பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்டபோது சிங்களவர்கள் இல்லை. பௌத்த மதத்திற்கு மாற்றப்பட்டவர்கள் தமிழர்கள். 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட வடக்கு மற்றும் கிழக்கில் தற்போது காணப்படும் பௌத்த எச்சங்கள் அனைத்தும் தமிழ் பௌத்தர்களின் காலத்தின் எச்சங்களாகும்.

இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடாக ஆக்குவதற்கு சிங்கள பௌத்தர்கள் ஒரு பொய்யான முயற்சியை மேற்கொள்கிறார்கள் என்பதை உணராத வரையில், இனவாதம் மேலோங்கும் என மேலும் தெரிவித்தார். (4-6)

---

### ஆலய அழிப்பு விவகாரம்

# சைவ மக்களை வன்முறைக்கு இட்டுச் செல்லும் செயல்

## அருட்தந்தை சக்திவேல்

(நெளுக்குளம்)

வெடுக்குநாறிமலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்டமை சைவ மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டு செல்லும் திட்டமிட்ட இனவாத அரசியலாகும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, வடகிழக்கினை சிங்கள பௌத்த மயமாக்கும் அடாவடி பயங்கரவாத தொல்பொருள் திணைக்களத்தோடு பயங்கரவாத இன அழிப்பு அரசியல் சக்திகள் தமிழர்களின் தேசியத்தை சிதைக்க களமிறக்கப்பட்டுள்ளன.

தற்போது தொடர்ச்சியாக சைவர்களின் வழிபாட்டுத் தலங்களை சிதைப்பதும் பக்தி சின்னங்களை உடைத்தழிப்பதும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந் நிலையிலேயே வவுனியா வெடுக்குநாறிமலை சைவ ஆலயம் சிதைக்கப்பட்டுள்ளது. இது சைவ மக்களை பலவந்தமாக வன்முறைக்கு இட்டு செல்லும் திட்டமிட்ட இனவாத அரசியலாகும்.

இதனை வன்மையாக கண்டிப்பதோடு இதற்கு பின்னால் இருக்கும் அரசியலையும் அரசியல் சக்திகளையும் தமிழ் அரசியல் தலைமைகளும் சமய தலைமைகளும் வெளிப்படுத்தாவிடின் இன்னும் ஒரு முள்ளிவாய்க்கால் அழிவை சந்திக்க வேண்டி ஏற்படும் என தெரிவித்தார். (4-6-299)

---

# சிவலிங்கமும் சிலைகளும் மீள நிறுவப்பட வேண்டும்!

## இந்துசமய தொண்டர் சபை

(அராலி)

வெடுக்குநாறி மலை ஆதி சிவன் கோவிலில் சிலைகள் உடைக்கப்பட்டும் சிவலிங்கம் காணாமல் செய்யப்பட்ட செயலையும் இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அச்சபை வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

உடனடியாக இச் செயலுக்கு காரணமானவர்கள் கண்டறியப்பட்டு குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும். சிவலிங்கமும் சிலைகளும் மீள நிறுவப்பட வேண்டும்.

ஏற்கனவே கடந்த காலங்களில் சைவ சமயிகளின் வழிபாட்டிற்கு பல இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டு, நேர்த்திக்கடன் நிறைவேற்றி வைத்த எட்டு அடி உயரமான சூலம் காணாமல் ஆக்கப்பட்டது இதன் தொடர் பின்னணியில் மேற்படி சம்பவத்தை மத நல்லிணக்கத்திற்கு பாரிய ஊறு. இச் செயலுக்கு அரசு தீர்வு காண வேண்டும்.

ஆதி சிவன் கோவில்கள் மீதான தொடர் விரும்பத்தகாத செயற்பாடுகள் வேலியே பயிரை மேய்ந்த கதையாக உள்ளது. தமிழ்ச் சைவர்களின் மனதை ஆழமாக பாதித்து வருகின்றது.

இந்த விடயத்தில் அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், சைவப்பெரியார்கள் செயலூக்கத்துடன் கூடிய எதிர்ப்பை வெளிக்காட்ட வலியுறுத்துகின்றோம் என தெரிவித்துள்ளது. (4-6-104)

---

# மண் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களால் வீதிகள் சேதம்

(மன்னார்)

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மடுகந்தை கிராமத்தில் அகழப்படும் மண்ணை விஸ்திரம் அற்ற வீதிகள் ஊடாக கனரக வாகனங்களில் ஏற்றி செல்வதால் வீதிகள் சிறிய பாலங்கள் சேதமடைந்துள்ளதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல வருடங்களாக அபிவிருத்தி செய்யப்படாத குறித்த வீதி தற்போது புதிதாக புனரமைத்துக் கொண்டு இருக்கும் வேளையில் குறித்த பாதையூடாக அதிக பாரத்துடன் கனரக வாகனங்கள் சென்றால் புதிய வீதி தாங்குமா என பொது மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் மண் ஏற்றிச் செல்வதால் மடுக்கரை.இராசமடு பாதை சேதமாக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

எனவே குறித்த பாதைகளினூடாக கனரக வாகனங்கள் மண் ஏற்றிச் செல்வதை உடனடியாக தடுத்து நிறுத்தி பொது மக்களுக்கான வீதிகளை பாதுகாக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6)

---

# சிவன் ஆலயம் அழிக்கப்பட்ட விடயம் நீதிக்கும் சமாதானத்திற்கும் நல்லதல்ல

## யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு

(வவுனியா)

வவுனியா வெடுக்குநாறி மலையிலுள்ள ஆதிலிங்கேஸ்வரர் திருத்தல புனிதச் சின்னங்களை சிதைத்தமையும் அப்புறப்படுத்தியமையையும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கின்றது என ஆணைக்குழுவின் இயக்குநர் அருட்பணி எஸ்.வி.வி.மங்களராஜா தெரிவித்துள்ளார்.

இந்து சமயம் இலங்கையின் தொன்மை மிகு மதம் என்பதையும் இலங்கையின் வடக்குக் கிழக்கில் மட்டுமல்ல நாடு முழுவதும் பல பாடல் பெற்ற சைவசமய வணக்கத் தலங்களும் பழைமை வாய்ந்த வழிபாட்டிடங்களும் உள்ளன என்பதை மற்றெல்லா மதத்தவரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

ஒரு சமயத்தவரது பழைமை வாய்ந்த மதத்தலத்தை அகற்றுவது அல்லது சிதைப்பது அல்லது அவமரியாதைப்படுத்துவது மதநல்லிணக்கத்திற்கு ஒருபோதும் உதவப் போவதில்லை. அண்மைக் காலமாக சில இந்து மத வணக்கத்தலங்கள் இவ்வாறு பெரும்பான்மை சமயத்தவரால் அழிக்கப்படுவது வேதனையளிப்பதாகியுள்ளது.

இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெறும் போது சட்டத்தையும் ஒழுங்கையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டியவர்கள் ஒன்றும் நடைபெறாதது போல செயற்படாதிருப்பது நாட்டுக்கும் மக்களுக்கும் நீதிக்கும் சமாதானத்துக்கும் நல்லதல்ல.

இலங்கையில் பௌத்தர்கள் பெரும்பான்மையினர் என்ற கூற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் தாம் விரும்பிய இடத்தில், அவ்விடத்தில் தொன்மை மிகுந்த இந்து ஆலயங்கள் இருந்தாலும் அவற்றை அகற்றி விட்டு பௌத்தர்கள் தமது விகாரைகளை அமைக்கலாம் என்ற கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாது.

இவ்வாறாக அண்மைக்காலமாக குருந்தூர் மலை விவகாரம், நெடுந்தீவு வெடியரசன் கோட்டை விவகாரம், கச்சதீவில் புதிதாகப் புத்தர் சிலை வைக்கப்பட்டமை ஆகிய செயற்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாது. இதுபோன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட உடன் காத்திரமான நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் எடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில்...

நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணியளவில் நல்லை ஆதீனம் முன்பாக சைவ அமைப்புகளின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் நடைபெற்றது.

தொல்லியல் திணைக்களமே தமிழர்களை தொலைக்காதே, ஆதிசிவன் கோவில் தொடர்ந்து இலக்கு வைக்கப்படுவது ஏன்?, சிவனை அசைத்தவனே அவனின் திருக்கூத்தை விரைவில் உணருவாய், சிவன் சொத்தை தீண்டினால் குலமே நாசமாகும் போன்ற வாசகங்களை போராட்டக்காரர்கள் தாங்கியிருந்தனர். (ம-7,9,33,104)

## இளவாலையில்...

ராகக் கடமை புரிந்து வரும் நிலையில் சீருடையில் இருந்த கயிற்றினை பயன்படுத்தி தூக்கிட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (ம-7,9)

## கசிப்பு உற்பத்தி...

தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணையில் கலவெட்டிதிடல் பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய நேற்று சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸார் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் இருவர் கைது செய்ய முற்பட்ட பொழுது ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து 48 லீற்றர் கசிப்பினையும் 268 லீற்றர் கோடாவும் மற்றும் கசிப்பு உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் உபகரணம் என்பனவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். (ம-7,9,316)

## பளையில்...

டிருந்த இளம் குடும்பஸ்தர் மீது பின்னால் சென்ற கனரக வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே குறித்த குடும்பஸ்தர் பலியாகியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம்பளை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கனரக வாகனச் சாரதி கைது செய்யப்பட்டதோடு பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ம-7,9,100)

## நெடுங்கேணி...

கேணி ஆதிசிவன் ஆலயத்தினை விரைவில் மீண்டும் அமைப்பது தொடர்பாக அமைச்சரவையில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் ஆதரவு இருக்கிறது.

இன - மதரீதியான அடக்குமுறைக்கு தற்போதைய அரசு இடமளிக்காது என்றார்.

அதேபோன்று, நெடுந்தீவு வெடியரசன் கோட்டைப் பகுதியில் காட்சிப்படுத்தப்பட்ட தொல்லியல் சின்னம் பற்றிய அறிவிப்புப் பலகை தொடர்பாக உரிய தரப்புக்களுடன் கலந்துரையாடிய நிலையில், குறித்த அறிவிப்புப் பலகை தற்போது நீக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7,9,33,104)

## 12 மாணவர்கள்...

வர்களை உடனடியாக சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்குமாறு யாழ்ப்பாண சிறுவர் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்துபோட் நிர்வாகத்தின் கீழ் திருநெல்வேலியில் இயங்குகின்ற சைவச் சிறுவர் ஆண்கள் விடுதியின் முகாமையாளராக இருந்தவர் மீது இந்துபோட் நிர்வாகம் முன்வைத்த முறைப்பாட்டை அடுத்து, அவரை விடுதியில் இருந்து வெளியேற்றுமாறு யாழ்ப்பாண் சிறுவர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது,

இதையடுத்து நேற்று முன்தினம் முகாமையாளர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து விடுதியில் தங்கியிருந்த குறித்த சில மாணவர்கள் விடுதிக்கு அண்மையில் அமைந்துள்ள இந்து போட் தலைமை அலுவலகத்தை அடித்து உடைத்து சேதப்படுத்தினர்.

இதுகுறித்து சிறுவர் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து நேற்றைய தினம் விசாரணை மேற்கொண்ட சிறுவர் நீதிமன்ற நீதிபதி இந்துபோட் அலுவலகத்தைத் தாக்கிய மாணவர்கள் 12 பேரையும் அச்சவேலியில் உள்ள சிறுவர் சீர்திருத்தப்பள்ளியில் சேர்க்குமாறு உத்தரவிட்டார்.

இவ் உத்தரவை அடுத்து அவ் மாணவர்கள் அங்கு சேர்க்கப்பட்டனர். (ம)

## தொல்லியலுக்கு...

திணைக்களத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நாங்கள் பல வருடமாக செய்து வந்திருக்கின்றோம். நீதிமன்றங்களிலும் இது சம்பந்தமான வழக்குகளில் வாதாடியிருக்கின்றோம்.

ஆனால் இது ஒரு விசேட சட்டம். நாட்டிலே இருக்கின்ற எல்லா சட்டங்களிலும் பார்க்க இந்தச் சட்டத்தில் மட்டும்தான் பிணையே வழங்க முடியாது என்றார். (ம-7,9,33,104)

## தேர்தல்...

ரீதியில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும் இதுவரை அது தொடர்பில் எதுவித பதில்களும் கிடைக்காத நிலையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ம-7,9)

## ஆதிலிங்கேஸ்...

வவுனியா, ஒலுமடு, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலய விக்கிரகங்கள் உடைத்து வீசப்பட்டமை தொடர்பில் குறித்த ஆலய நிர்வாகத்தினரின் தொலைபேசி அழைப்புக்களை பெற நெடுங்கேணி பொலிஸார் வவுனியா நீதவான் நீதிமன்றில் நேற்று மனுத் தாக்கல் செய்தனர்.

இதன்போது, குறித்த மன்றில் இருந்த சட்டத்தரணி திருச்செல்வம் திருஅருள் தலைமையிலான சட்டத்தரணிகளான சபீஸ், சியாத், திபின் சுன், கேதீஸ்வரன், மதுஞ்சளா, நிவிதா, ஜிதர்சன், இளஞ்செழியன் ஆகியோர் பொலிஸாரின் கோரிக்கைக்கு ஆட்சேபனை தெரிவித்ததுடன், குறித்த விக்கிரகங்களை உடைத்தமை தொடர்பில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் எனவும், அதற்கு மன்று உத்தரவு இட வேண்டும் எனவும் கோரினர்.

சட்டத்தரணிகளின் கோரிக்கையை ஏற்ற வவுனியா நீதவான் நீதிமன்ற நீதிபதி சுபாசினி தேவராசா உடனடியாக விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைகளை மேற்கொண்டு, நாளை 30ஆம் திகதி மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், குற்றவாளிகளை கைது செய்யுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (ம-7,9,250)

# போராட்டங்களை ஒடுக்க அரசு திட்டம்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

பயங்கரவாதத்துக்கு எதிராக எழுச்சி பெறும் மக்களையும் தொழிற்சங்கங்களையும் ஒடுக்க புதிய பயங்கரவாத எதிர்ப்பு யோசனையை அறிமுகப்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், ஜனநாயக கோட்பாடுகளுக்கு எதிரானது என நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். (ம-7,9)


கொவிசெத தேவி வாசி — சீட்டிழுப்பு இலக்கம் 3315

ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்: Q 14 31 35 38

| LAPTOP வெற்றியிலக்கம் | LED TV வெற்றியிலக்கம் |
|---|---|
| 0541703 | 1054816 |
| 1174098 | 0714056 |
| 0314260 | 0870499 |
| 1072952 | |
| 1170032 | |

விசேட தங்கக்காசு வெற்றியிலக்கங்கள்: 0389711, 1468119

இலட்சாதிபதி வெற்றியிலக்கம்: 37801

தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு திகதி 28/03/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1528 — மேஷம் 0 4 6 4 9 0

தன நிதானய — திகதி - 2023.03.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 1103 — P 19 41 74 82

மெகா பவர் — திகதி 28/03/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1421 — Q 24 07 24 37 51

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2023.03.28 — சீட்டிழுப்பு இலக்கம் 382 — கன்னி 07 09 15 49 கன்னி

மஹஜன சம்பத — திகதி 2023/03/28 — சீட்டிழுப்பு இலக்கம் 5073 — S 8 4 0 9 1 2

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2048 — சீட்டிழுப்பு திகதி 2023.03.28 — நிறம் இள நீலம் — தினம் செவ்வாய்க்கிழமை — M 20 31 32 41 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,771,400/-

சனிதா — செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு திகதி : 2023.03.28 — சீட்டிழுப்பு இல : 4209 — வர்ணம் : பச்சை — ரூ. 4,767,900/- — 02 08 30 53 S

சசிரி — சீட்டிழுப்பு வாரம் 306 — சீட்டிழுப்பு திகதி 2023.03.28 — செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 01 30 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,134,580/-

ராசி — சுப்பர் ஜக்பொட் ரூ. 2,000,000/- — திகதி 2023-03-28 — வெற்றி வாரம் 3760 — வர்ணம் சிவப்பு — 15 24 38 58 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,913,340/-

ஆங்கில எழுத்து சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — G 15 11 48 57 68 — சீட்டிழுப்பு வாரம் 1224 — 2023.03.28 செவ்வாய்க்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 317,196,176.20

அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — சீட்டிழுப்பு இல : 1874 — சீட்டிழுப்பு திகதி : 2023.03.28 — வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,544,880/- — 07 28 33 34 B

DLB DEVELOPMENT LOTTERIES


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு (C-6251)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6251) **V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் · 0777-068-777

## IELTS Academic General UKVI

#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 17)
நேரடி, zoom வகுப்புக்களாக

**A1 IELTS Life Skills** திருமணம் செய்து UK செல்வோருக்கானது
**B1 Skilled Worker Visa** மூலம் வெளிநாடு செல்வோருக்கானது

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
புதிய பிரிவு ஆரம்பம் 1/4/2023-SAT,3/4/2023-MON-9 am or 3 pm

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
**DIPLOMA IN ENGLISH**
**SPOKEN ENGLISH**
DMI COMPUTER EDUCATION 0777 17 35 17 (C-6248)

**DMI COMPUTER EDUCATION**
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்பு கொள்ளவும். வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர். (14947)

+14372446737
+16476571347 Canada
077 240 9276 Srilanka

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 34 வயதான நற்குணமுள்ள 2 இல் செவ்வாய் உள்ள படித்த மணமகனுக்கு மணமகள் தேவை (15064)

**077 506 0062**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதியில் 4 ¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (15074)
தொடர்பு
**021 221 5052**
**077 606 8834**


## முன்னாள் சபாநாயகர் காலமானார்

இலங்கை பாராளுமன்றத்தின் 17 வது சபாநாயகராக கடமையாற்றிய ஜோசப் மைக்கல் பெரேரா நேற்று (28) காலமானார்.

ஜோசப் மைக்கல் பெரேரா தனது 82 ஆவது வயதில் நேற்று காலமானார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களில் ஒருவரான ஜோசப் மைக்கல் பெரேரா, பல முக்கிய அமைச்சுப் பொறுப்புகளையும் வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,9)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (14953)
**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 22 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**
**நிலப்பரப்பு**

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 132 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- ஒரு பரப்பின் விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

பார்வையிடும் நேரம் : காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை
தரகர் தேவையில்லை
தொடர்புகளுக்கு :- ஜெயம் (15075)
**077 814 7389, 077 986 5457**

## IELTS வகுப்புக்கள்

⇨ ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே
⇨ அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்

**6 புள்ளிகளுக்கு மேல் பெறாவிட்டால் செலுத்திய பணம் மீளளிக்கப்படும்.**

10 வருட கால தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
**WINSTAR CONSULTANTS PVT LTD**
45, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
**071 071 6979** (15073)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் புத்தூரில் 87 பரப்புக்காணி விற்பனைக்கு (மேட்டு நிலம்) (நிலப்பரப்பு)**




- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் (காபற்வீதி) இருந்து 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்புக்கள் சூழ உள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று நிலம்.
- ஒரு பரப்பின் விலை (300,000) மூன்று இலட்சம் மற்றும் (200,000) இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த காணி
- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரம் சோமஸ்கந்தா கல்லூரியில் இருந்து 1 km தூரம் (15042)

பார்வையிடும் நேரம் :
காலை 06 தொடக்கம்
மாலை 6 வரை

Owner & Director
T.KALAITHASAN (KARAN)
**076 733 6047**
**076 333 6079**
**076 733 6093**
Office No :
**021 315 5900**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் அச்செழு பகுதியில் 35 பரப்பு காணி விற்பனைக்குண்டு**

**நிலப்பரப்பு**

- அச்செழு வடக்கு நீர்வேலி வல்லியப்பர் சிவன்கோயிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று (குழாய்க் கிணறு உள்ளது)
- 1 பரப்பின் விலை காப்பெற் வீதியை பிரதான முகப்பாகக் கொண்ட காணிகள் 15 இலட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணிகள் 14 இலட்சம் தொடக்கம் 12 இலட்சம் வரையும் உள்ளது.



- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்புகளுக்கு :- ஜெயம் (15076)
**077 814 7389**
**077 986 5457**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்சோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.